மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இப்போது அந்த விவரங்கள் இல்லை. 16-ம் தேதி நடைபெறவிருக்கிற மானியக் கோரிக்கையின்போது முழு விளக்கங்களும் அளிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, what is the number of private buses that have been withdrawn from operation in the Dharmapuri district and the number of Government buses introduced there ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இது இந்தக் கேள்வியில் இடம்பெற வில்லை.

சர்க்கார் வாகனங்களுக்கான பெட்ரோல்

*203 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் உபயோகப்படுத்தும் ஜீப், வான் முதலிய வாகனுதிகளுக்கு இந்தியன் ஆயில் கம்பெனி விநியோகிக்கும் பெட்ரோல் உபயோகப்படுத்தப்படுகிறதா ?

(இ) இல்லையென்ருல் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு ஏ. எம். ராஜா : தமிழக அரசின் வாகனங்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிற நிலையில், தமிழக அரசு சொந்த பெட்ரோல் பங்குகளை ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இந்தியன் ஆயில் கம்பெனியிடமிருந்து எண்ணெய் வாங்குவதுபற்றிய கேள்வி தொடக்கக் கேள்வி. இந்தக் கேள்விக்கு இதில் இடமில்லை.

திரு. கே. விநயகம் : நம் பேருந்து வண்டிகள், ஜீப்கள் இவை நாடு முழுவதிலும் இருக்கின்றன. இந்த வண்டிகளுக்கு வேண்டிய டீஸல் ஆயில், பெட்ரோல் மற்றவையெல்லாம் இந்தக் கம்பெனி பங்குகள் எங்கெங்கு இருக்கிறதோ அங்கு வாங்குகிருர்கள். பல ஊர்களில் பங்குகள் இல்லாத இடங்கள் இருக்கலாம். அங்கெல்லாம் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ? தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குகிருர்களா ? அப்படி பங்குகள் இல்லாத இடங்களில் பங்குகள் வைக்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனைக் கேட்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : ஐ.ஓ.ஸி.-யில் எண்ணெய் வாங்குவதின்மூலம் குறிப்பாக நம் தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் உள்ள வண்டிகளுக்கு எண்ணெய் வாங்குவதின்மூலம் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஐ.ஓ.ஸி.யிடமிருந்து எண்ணெய் பெறமுடியாத இடங்களில் தனியார் வைத்திருக்கும் அமைப்புகளிலிருந்து எண்ணெய் பெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : ஐ.ஓ.ஸி.-யிலிருந்து எண்ணெய் வாங்குவதில் சலுகைகள் அளிக்கிருர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அந்தச் சலுகைகள் என்ன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இப்போது கிலோ லிட்டருக்கு ஐந்து பைசா குறைத்துக் கொள்கிருர்கள். கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர். அங்கேயே நாம் ஒழுங்காக அவ்வப்போது யில் தொகையைக்

கட்டிவிட்டால், அதற்காக கிலோ லிட்டருக்கு இரண்டு ரூபாய் குறைக்கிறார்கள். ஒழுங்காகப் பில் தொகையைக் கட்டிவிடுகிறோம் என்று மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக இருந்தால் இரண்டு ரூபாயை ஐந்து ரூபாயாகக் குறைக்கத் தயாராயிருக்கிறார்கள். இதில் முக்கியமாகத் தேசியக் கொள்கையின் அடிப்படையில் ஐ.ஓ.ஸி.-யிடமிருந்து எண்ணெய் வாங்குவது என்று தீர்மானித்திருக்கிறோம்.

Fishing boats

* 205 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the details of the French fishing boats donated by the French Government ; and

(*b*) whether similar donations are anticipated from other countries.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பிரெஞ்சு அரசு இம் மாநிலத்திற்கு மீன்பிடி படகு எதையும் நன்கொடையாகக் கொடுக்கவில்லை. ஆயினும், பிரெஞ்சு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் திருவேவியன் தலைமையில் வந்துள்ள பிரெஞ்சு வல்லுநர் குழு ஒன்று கருவிகளுடன் பொருந்திய இரண்டு "டோரிஸ்" படகுகளைத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் செய்முறை விளக்கத்திற்காகக் கொண்டுவந்துள்ளது. இப் படகுகளைக் குறைந்த செலவில் (ரூ. 15,000) தயாரிக்க முடியும் என்பதும், அதன் மின்காந்த அலைக் கருவியும் (Radar Equipment) கிளம்பிச் செல்வதற்கு அல்லது தங்கியிருப்பதற்குத் துறைமுக வசதிகள் தேவையில்லை என்பதும் இப்படகுகளின் சிறப்பியல்புகளாகும்.

(இ) மற்றெந்த நாட்டிலிருந்தும் படகு எதுவும் நன்கொடையாக எதிர்பார்க்கப்படவில்லை.

திரு. டி. மார்டின் : இந்த 'டோரிஸ்' விசைப்படகுகளைத் தமிழக சர்க்காரே வைத்துக்கொள்ளுகிற நோக்கமுண்டா? அல்லது அவற்றை மீனவர்களுக்கு மாவட்ட ரீதியாக பரீட்சார்த்தமாகக் கொடுக்க ஒரு திட்டமிருந்தால் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வந்திருக்கிற மீனவர்களுக்கு, பெரியதாழை, மணப்பாடு போன்ற இடங்களில், அதிகமாக மீன் கிடைக்கும் இடங்களில், இந்தப் படகுகளை விநியோகிக்க ஏதாவது செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தப் படகுகள் இப்போது பயிற்சி அளிப்பதற்காக இங்கு வந்திருக்கின்றன. காலா, வாலை, பாரை மீன்கள் எங்கு அதிகமாகக் கிடைக்கும் என்று சர்வே செய்யப்படுகிறது. கடந்த நாற்பது நாட்களாக நம் கடலோரப் பகுதிகளில் பதினைந்து மைல்களுக்கு அப்பால் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது வரையில் 175 கிலோ கிராம் மீன் பிடித்திருக்கிறார்கள். (கால் டன்.) நம் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு, இதுவரையில் ஆறு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறார்கள். இதில் இரண்டு டிரைவர்கள், ஒரு இன்ஸ்பெக்டர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இது படகுகளில் சென்று தூண்டிபோட்டு மீன் பிடிப்பது. இரண்டு போட்கள் பயிற்சி அளிக்க வந்து நாற்பது தினங்கள் ஆகின்றன. 15-ம் தேதி பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்தவர்கள், அதாவது பயிற்சி அளித்தவர்கள், நாளை ஊருக்குத் திரும்பிச் செல்கிறார்கள். இன்று அவர்களுக்கு விருந்து உபசாரம் செய்து அனுப்பிவைக்கிறோம். அந்தப் போட்ஸ் இங்குதான் தங்கியிருக்கும். இன்னும் நன்கொடையாக வழங்கியதாகச் சொல்வதற்கில்லை. அந்தப் போட்ஸ் இங்கு தங்கியிருக்கும். குறைந்த செலவில் அது நமக்குப் பலன் அளிக்கக்கூடியதாக இருக்குமானால், அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் யோசிக்கும்.